சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| பெயர் | பிரபாகர் | வயது | 42 |
|---|---|---|---|
| த/பெ | மாணிக்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ஆலங்கொம்பு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

எனக்கு புல எண்.749 ல் பூமி உள்ளது என்றால் சரி தான். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ¾ ஏக்கர் ஆகும். அது எப்போது வாங்கப்பட்டது என்றால் சுமார் 11 ஆண்டுகள் இருக்கும். நான் வாங்கிய அந்த பூமிக்கு கிழ புறம் புல எண்.749/2, 749/1D1 மற்றும் 749/1D2 ஆகிய பூமிகள் உள்ளது என்றால் சரி தான். அந்த இரண்டு பூமிகளுக்கு நடுவில் தென் வடலாக ஒரு பாதை உள்ளது என்றால் சரி தான். அதன் புல எண்.749/1 B என்றால் அதன் புல எண் எனக்கு தெரியாது. இரண்டு பூமிகளுக்கு நடுவில் உள்ள பாதை என்னுடைய சொந்த பாதை என்றால் சரி அல்ல. அந்த பாதையில் பொது மக்களும் பயன் படுத்துவார்கள். அந்த பாதைக்கு வட புறம் சென்னாமலை கரடு உள்ளது என்றால் சரி தான். அந்த சென்னாமலை கரடு தமிழ்நாடு வனத்துறைக்கு சொந்தமானது என்றால் சரி தான். அந்த கரடுக்குள் போவதற்கு யாருக்கும் அனுமதி இல்லை என்றால் நான் போனது இல்லை. ஆனால் ஆடு, மற்றும் மாடுகள் மேய்ப்பதற்கு போகிறார்கள். புல எண்.749/1B பாதை என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. பொது வழி பாதை என்று உள்ளது. பொது வழி பாதை என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய

பத்திரத்தில் நீர்வழித் தடம் என்று கூறப்பட்டுள்ளது. புல எண்.749 ற்கு தென் புறத்தில் புல எண்.746 உள்ளது என்றால் சரி தான். புல எண்.746 ல் இருந்து புல எண்.749 பூமிக்கு வரலாம் என்றால் சரி தான். புல எண்.746 பூமிக்கு தென் புறத்தில் புல எண்.729 பள்ளவாரி உள்ளது என்றால் சரி தான்.

(வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறிக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.